## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி - ஏழாம் பத்து

**(ஸர்வஸக்தனான எம்பெருமான் திறத்தில், ஸாதனபலமாகத் திருவாய்மொழி பாடுவித்த உபகாரத்திற்குக் கைம்மாறு இலாமையைப் பேசுதல்)**

## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 7-1 - உண்ணிலாவிய

**('எம்பெருமான் தன் திருவடிகளில் சேராதபடி இன்னும் இந்த்ரியங்களாலே எத்தனை நாள் நலிவிப்பனோ?' என்று ஆழ்வார் ஓலமிடுதல்)**

3337 * உண்ணிலாவிய ஐவரால் குமை
தீற்றி * என்னை உன் பாத பங்கயம் *
நண்ணிலா வகையே * நலிவான்
இன்னம் எண்ணுகின்றாய் **
எண்ணிலாப் பெருமாயனே! இமையோர்கள்
ஏத்தும் * உலகம் மூன்றுடை *
அண்ணலே! அமுதே! அப்பனே! *
என்னை ஆள்வானே! 1

3338 என்னை ஆளும் வன்கோ ஓரைந்திவை பெய்து *
இராப்பகல் மோதுவித்திட்டு *
உன்னை நான் அணுகா வகை *
செய்து போதி கண்டாய் **
கன்னலே! அமுதே! கார்முகில் வண்ணனே! *
கடல் ஞாலம் காக்கின்ற *
மின்னு நேமியினாய்! *
வினையேனுடை வேதியனே! 2

3339 வேதியா நிற்கும் ஐவரால் * வினையேனை
மோதுவித்து * உன் திருவடிச்
சாதியா வகை * நீ தடுத்து
என் பெறுதி? அந்தோ! **
ஆதியாகி அகலிடம் படைத்து * உண்டுமிழ்ந்து
கடந்து இடந்திட்ட *
சோதி நீள்முடியாய்! *
தொண்டனேன் மதுசூதனனே! 3

3340 சூது நான் அறியா வகை * சுழற்றி ஓர்
ஐவரைக் காட்டி * உன்னடிப்
போது நான் அணுகா வகை *
செய்து போதி கண்டாய் **
யாதும் யாவரும் இன்றி நின்னகம் பால்

ஒடுக்கி * ஓர் ஆலின் நீளிலை *
மீது சேர் குழவி! *
வினையேன் வினை தீர் மருந்தே! 4

3341 தீர் மருந்தின்றி ஐந்து நோயடும் *
செக்கிலிட்டுத் திரிக்கும் ஐவரை *
நேர் மருங்குடைத் தாவடைத்து *
நெகிழ்ப்பான் ஒக்கின்றாய் **
ஆர் மருந்தினி ஆகுவார்? * அடலாழி
ஏந்தி அசுரர் வன்குலம் *
வேர் மருங்கறுத்தாய்! *
விண்ணுளார் பெருமானேயோ! 5

3342 விண்ணுளார் பெருமாற்கு அடிமை செய்வாரையும் *
செறும் ஐம்புலன் இவை *
மண்ணுள் என்னைப் பெற்றால் * என் செய்யா
மற்று நீயும் விட்டால்? **
பண்ணுளாய்! கவி தன்னுளாய்! *
பத்தியினுள்ளாய்! பரமீசனே! * வந்தென்
கண்ணுளாய்! நெஞ்சுளாய்! * சொல்லுளாய்!
ஒன்று சொல்லாயே 6

3343 ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கிலாத *
ஓரைவர் வன்கயவரை *
என்று யான் வெல்கிற்பன் * உன்
திருவருள் இல்லையேல்? **
அன்று தேவர் அசுரர் வாங்க *
அலைகடல் அரவம் அளாவி * ஓர்
குன்றம் வைத்த எந்தாய்! *
கொடியேன் பருகு இன்னமுதே! 7

3344 இன்னமுதெனத் தோன்றி * ஓரைவர்
யாவரையும் மயக்க * நீ வைத்த
முன்ன[1] மாயம் எல்லாம் * முழு
வேரரிந்து ** என்னை உன்
சின்னமும் திருமூர்த்தியும் * சிந்தித்து ஏத்திக்
கை தொழவே அருள் எனக்கு *
என்னம்மா! என் கண்ணா! *
இமையோர் தம் குல முதலே! 8

3345 குலமுதலடும் தீவினைக் * கொடு வன்குழியினில்

[1] முன்னை

வீழ்க்கும் ஐவரை *
வலமுதல் கெடுக்கும் * வலமே[2]
தந்தருள் கண்டாய் **
நிலமுதல் இனி எவ்வுலகுக்கும் * நிற்பன
செல்வன என * பொருள்
பலமுதல் படைத்தாய்! *
என் கண்ணா! என் பரஞ்சுடரே! 9

3346 என் பரஞ்சுடரே! என்று உன்னை அலற்றி * உன்
இணைத் தாமரைகட்கு *
அன்புருகி நிற்கும் * அது நிற்கச்
சுமடு தந்தாய் **
வன்பரங்கள் எடுத்து * ஐவர் திசை திசை
வலித்தெற்றுகின்றனர் *
முன்பரவை கடைந்து * அமுதம்
கொண்ட மூர்த்தியோ! 10

3347 * கொண்ட மூர்த்தி ஓர் மூவராய்க் * குணங்கள்
படைத்து அளித்துக் கெடுக்கும் * அப்
புண்டரீகக் கொப்பூழ்ப் * புனற்
பள்ளி அப்பனுக்கே **
தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன்
சடகோபன் * சொல்லாயிரத்துள் இப்பத்தும் *
கண்டு பாட வல்லார் * வினை
போம் கங்குலும் பகலே 11

**அடிவரவு:** உள் என்னை வேதி சூது தீர் விண் ஒன்று இன்னம் குலம்
என் கொண்ட கங்குல்

[2] வரமே